சீராகவும் சிறப்பாகவும் இயங்கி வரும் தனியார் பள்ளிகள் இச் சட்டம் குறித்து எவ்வித சஞ்சலமும் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு இயங்காத ஒரு சில பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தி அவற்றைச் சீர்படுத்தவே இச்சட்டம் செயல்படும். ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே நெருங்கிய நல்லுணர்வை ஏற்படுத்தவும், அரசு அதிகாரிகளுக்கும் பள்ளி நிர்வாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தவும், இச்சட்டம் வகை செய்யும் என்று நம்புகிறேன். இது உரிமைகளைப் பறிக்கும் சட்டமல்ல. உரிமைகளை வழங்கும் சட்டம்தான். கட்டுப்பாடு சட்டமல்ல. சீர் செய்து ஒழுங்கு செய்யும் சட்டம்தான். ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்கவும், பள்ளிகள் திறம்பட இயங்கவும், ஒரு தெளிவான நிலையையும் நியாயமான அமைப்பையும் உருவாக்க வேண்டுமென்ற உணர்வில், அரசு கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தை சமுதாயம் வரவேற்கும் என்று எதிர்பார்த்து, இச் சட்டத்தை மாண்புமிக்க இந்த அவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

(7) நடைமுறைக் கேள்வி.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு அரசியல் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு முரணாக இருப்பது குறித்து.

* Thiru M. A. LATHEEF : Sir, I rise on a point of order. Mr. Speaker, Sir, before this Bill is taken up for consideration by this House, I would like to oppose this Bill on the ground . . .

Mr. SPEAKER : Point of Order என்ன என்பதைச் சொல்லுங்கள்.

Thiru M. A. LATHEEF : I oppose this Bill on the ground that this Bill is inconsistence to and violative of Clause of Article 13 of the Constitution. In clause 2 of Article 13 of the Constitution, it has been stated in very categorical and clear terms that the State Legislatures are precluded from making any law which would abridge or violate the Fundamental Rights guaranteed under Part III of the Constitution. In Article 13 (2) it has been

stated that the State shall not make any law which takes away or abridges the rights conferred by this part and any law made in contravention of this clause shall, to the extent of the contravention, be void'. I would like to submit, Sir, that Article 13 (2) of the Constitution not only imposes a check—it is not merely a check—but it prohibits the State and also it goes into the root of the matter and limits and restricts the power of the State to make law which would violate or abridge the rights enunciated in Part III of the Constitution of India.

The Hon. Minister for Education has just now highlighted the important aspects of the Bill. In the light of his statement now I understand that this Bill violates Article 19 (1) (*c*), Article 19 (1) (*f*), Article 26, Article 29, Article 30 and Article 31 of the Constitution of India. All these Articles do form part and parcel of Part III of the Constitution of India in which Fundamental Rights have been incorporated. There has been a Constitutional prohibition. Constitutional prohibition and constitutional preclusion have been imposed by Article 13 (2) on the State Legislature to bring any Bill which would infringe the Fundamental Rights or part or parts of the Fundamental Rights enunciated or incorporated in the Constitution of India. Such a Bill cannot be admitted and such a Bill cannot be taken for consideration by the House.

Now a question may be raised whether the State Legislature is not competent to pass any law which attempts to regularise certain system of society. I would submit to you, Sir, that no doubt the State Legislature is competent to make any law which may regularise, which may condition, which may guide or which may rationalise any activity or activities of the Community in such a manner as to bring maximum social advantage. But Article 13 (2) imposes a definite prohibition upon the State Legislature not to embark upon a legislation which would infringe or abridge any fundamental right or fundamental rights enunciated or incorporated or guaranteed in the Constitution of India.

I would submit that so far as preclusion is concerned, it is not available to any outsider. I would like to define the sovereign authority of the Legislature. I would state that sovereign authoriy

of the Legislature cannot be restricted by an outsider. Nobody outside the House can preclude or prohibit the introduction of any Bill or consideration of any Bill in the House. No relief is available to an outsider. He cannot invoke the jurisdiction of the Court before such a Bill is introduced in this House or before such a Bill was considered and passed by this House. The relief would be available only after the Bill was passed by the House.. The relief would be made available to a private individual or groups of individuals only after the Bill is passed by this House. Then only the jurisdiction of the Court would arise. So far as Members of the Legislature are concerned, as a Member of the Honourable House, I am entitled to raise this question even at this junture. I am entitled to bring this constitutional question to the notice of the Hon. Speaker under whose stewardship the most unconstitutional legislation has been brought forward for the consideration of this august House. I submit to you, Sir, that this Bill cannot be considered and passed by this House.

This Bill has been brought forward with a view to regularise the irregularities. This Bill attempts to constitutionalise what would have been unconstitutional. This Bill tries to rationalise irrationalities. I submit, Sir, that it is beyond the jurisdiction and competence of this House. It is a question of constitutional incompetency of this House and therefore, I request the Hon. Speaker not to allow this Bill for consideration of this House because it violates the fundamental rights guaranteed in the Constitution. If you allow it, then we will be violating the Fundamental rights incorporated in Part III and thereby will attract Clause (2) of Article 13 of the Constitution of India.

I therefore request the Hon. Speaker to reject the motion of the Hon. Minister and the Hon. Minister may be requested to withdraw the Bill and recommit the same to a Select Committee or redraft the Bill so as not to affect the fundamental rights which have been enunciated in Part III of the Constitution. This Bill violates Articles 19 (1) (*c*), 19 (1) (*d*), 26, 29 (2), 30 and 31 of the Constitution. It directly violates the provisions of Article 13 of the Constitution. Therefore, this Bill cannot be taken up for consideration because it suffers from constitutional incapa-

city, it suffers from constitutional inconsistency. So far as this Bill is concerned, before a definite ruling is given on this matter, this Bill cannot be taken up for consideration by this House.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் இந்தச் சட்டத்தை எடுத்துக்கொள்வதே அரசியல் அமைப்புச் சட்ட விதிகளுக்கு முரண்பாடானது என்று வாதிட்டார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் தந்துள்ள அடிப்படை உரிமைகளில் எந்த ஒன்றையும் பறிக்கிற நோக்கம் கிடையாது, பறிக்கிற வகையிலும் இந்தச் சட்டம் அமையவில்லை என்பதை தெள்ளத் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அரசியல் அமைப்புச் சட்ட பிரிவுகள் எல்லாம் ஆராயப்பட்டிருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்ட உரிமைகள் எதையும் பறிக்கிற நோக்கம் இச்சட்டத்திற்கு இல்லை. ஒழுங்குபடுத்துகின்ற அடிப் படையில்தான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும், இங்கே இருக்கின்ற சட்டத்துறையைச் சார்ந்த சட்ட வல்லுநர்கள் அத்தனை பேர்களும் இச்சட்டத்தை ஆராய்ந்திருப்பது மட்டுமின்றி, மத்திய அரசு அதிகாரிகளாலும் இது ஆராயப்பட்டிருக்கிறது.

கூட்டு ஆய்வுக்குழு பல முறை ஆராய்ந்திருக்கிறது. அடிப் படை உரிமைகளை பாதிக்கின்றதாக இருக்கின்ற ஐயப்பாடுள்ள பகுதிகள் எல்லாம் கூட ஏற்கனவே கொண்டுவரப்பட்ட சட்டத்தி லிருந்து, ஐயத்திற்குக்கூட, கொஞ்சமும் இடம் கொடுக்க வேண்டா மென்ற அடிப்படையில், ஐயத்திற்குரிய பகுதிகள் எல்லாம் நீக்கப் பட்டு தெளிவாக இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆக, சிறுபான்மையோர்களுடைய உரிமையைப் பறிக்கின்ற எந்த நோக்கமும் இந்தச் சட்டத்திற்கு இல்லை. அவைகளில் ஏற்கனவே இருந்த விதிகள்கூட சில திருத்தப்பட்டு இருக்கின்றன இந்தத் திருத்த சட்டத்தில். கூட்டாய்வுக் குழுவில் அதைத் தெளிவாக ஆய்ந்திருக்கிறார்கள். இதே அடிப்படையில் வேறு சில மாநிலங் களில் சட்டம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, நடை முறையில் இருந்து வருகிறது. உரிமையைப் பறிப்பதாக இருந் தால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள்

சொல்கின்ற வாதங்களும் வரும். உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையில் இந்தச் சட்டம் அரசியல் நிர்ணய சட்டத்திற்கோ, மற்றவைகளுக்கோ முரணானதும், எதிர்ப்பாக வருவதற்கும் நியாயம் இல்லை. எனவே, இந்தப் பேரவை இந்த மசோதாவை எடுத்து, வாதித்து நிறைவேற்றுவதில் எந்த அடிப்படையான தவறும் கிடையாது. அரசியல் அமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானது ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir before you give the ruling, I submit that the clarification given by the Hon. Minister does not save us from the Constitutional contingency that has been posed before this House. I submit that the Articles of the Constitution which have been read out by me just now have been directly sought to be violated by this Bill and no clarification has been given with regard to the points raised by me. I specifically submitted that Articles 19 (1) (*c*), 19 (1) (*f*), 26, 29, 30 and 31 of the Constitution of India are directly being violated and without clarifying the position and without satisfying this House, I submit, that this Bill cannot be taken for consideration. What is brought in violation of Article 13 (2) of the Constitution is nugatory, ineffectual in law and it will not have legal efficacy or legal effect and it will be a still-born law.

Therefore, we should not indulge in such a thing which will be branded afterwards as a transgression of constitutional limit, not visualised by the Constitution of India. So, you must give your ruling which would satisfy the constitutional points that have been raised by me. I again submit that this House is not competent to discuss it and we have been precluded under Article 13 (2) of the Constitution to consider this Bill and so this Bill cannot be taken up now . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே ஒரு மசோதாவை எடுத்து, அதைச் சட்டமாக்குவதற்கு உரிமை உண்டா என்று எழுப்புகின்ற ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி பொதுவாக பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு அளிப்பது முறையல்ல. இந்த அவையேதான் அதைப்பற்றி ஒரு முடிவு எடுக்கவேண்டும். அவை

யிலே அதற்காக தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டிய தேவையில்லை. அவை முன்னே கொண்டு வந்து மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வருகிற தீர்மானமே அதற்கு ஒரு முடிவாக இருக்கும். அதுதான் மரபு.

'It is the accepted practice in the Lok Sabha that the Speaker does not give any ruling on a point of order which raises the question, whether a Bill is constitutionally within the legislative competence of the House. It is for the House itself to decide such matters not on a separate motion to that effect but indirectly on the motion that is then before the House in regard to a Bill . . . .'

என்று இருக்கிறது.

Thiru M. A. LATHEEF: This ruling does not pertain to Article 13 (2) of the Constitution. No decision is required, no resolution is required, no vote is required when a definite provision is included in the Constitution. Article 13 (2) of the Constitution definitely says that no law should be enacted by the Legislature which would take away the established fundamental rights of the Constitution which have been incorporated in Part III of the Constitution.

Such a Bill cannot be taken into consideration of the House and once it is objected to, it is for the Hon. Speaker to take congnizance of such constitutional objection and such an unconstitutional Bill should not be allowed to be considered in this House, especially when it affects the fundamental rights of the minorities. Sir, I have scrupulously confined myself only to such rights which have been made a part of the Constitution. So far as the sovereign authority is concerned, it cannot be questioned by an outsider but at the time of introduction or consideration of a Bill, when a question of its unconstitutionality is raised in the House, it is for the Hon. Speaker to give due consideration to it.

Finally, I would ask the Hon. Speaker to reserve his ruling and postpone the consideration of the Bill now and after due consideration and consultation with legal luminaries, this Bill can be considered.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் சபா நாயகர் அவர்களே, மன்றத்தின் முன்னாலே இருக்கக்கூடிய மசோதா அரசியல் சட்டத்தினுடைய ஷரத்துக்கு உட்பட்டிருக்கிறதா அல்லது அப்பாற்பட்டதா என்பது அந்த மசோதா தாக்கல் செய்கின்ற சமயத்தில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது அந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு, செலக்ட் கமிட்டியின் ஆய்வுக்குப் போய்விட்டு, மீண்டும் இந்த மன்றத்திற்கு முன் வந்திருக்கிறது. ஆகவே, இந்த சமயத்தில் அது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லி, அதைத் தடுத்து நிறுத்துவது சரியல்ல. எந்தக் குடிமகனும் இந்த மசோதா சட்டமாக செய்யப்பட்டதற்குப் பிறகு அது அரசியல் நிர்ணய சட்டத்திற்கு ஒத்திருக்கிறதா அல்லது முரண்பட்டிருக்கிறதா என்று தீர்ப்பு கோரி கோர்ட்டில் வழக்குப் போடலாம்.

திரு. லத்தீப் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ரிட் பெட்டிஷன் மூலம் இந்தச் சட்டம் செல்லுபடியானதில்லை என்று சட்டமாக நிறைவேறியதற்குப் பிறகு வேண்டுமானால் ஹைகோர்ட்டிலோ, அல்லது சுப்ரீம் கோர்ட்டிலோ சாலஞ்சு செய்யலாம். ஆனால், இந்த மன்றத்தில் நடைபெறுகிற விவாதத்தைத் தடுப்பது முறையல்ல.

THIRU M. A. LATHEEF : Sir, I admit that the hon. Member is a senior legislator but I submit that the Bill can be objected to not only at the time of its introduction but also after it has been resubmitted after due consideration by the Joint Select Committee, and that too when a major portion of the Bill has been materially changed by the Committee. So far as this House is concerned, it is a new introduction. I think the law officers will throw light on this aspect of the matter.

As regards the other point raised by the hon. Member, Thiru Krishnamoorthy, that I can raise this matter in a court of law, I know that. I can raise it and I am going to raise it. That is a different question. That question will arise only after the Bill has been duly passed in this House and also that relief would be available to an outsider also. But so far as I am concerned, as a Member of the House and as part of the House, I am entitled to raise this question and warn the House through the Hon. Speaker not to indulge in unconstitutionalities.

திரு. என். கே. பழனிச்சாமி : சார், இந்தச் சபையில் எதையும் தெரிவிக்க அதிகாரம் இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யும்போது தடை செய்ய உரிமை இருக்கிறதா இல்லையா என்பதில் பேரவைத் தலைவருக்குப் பொறுப்பில்லை. இந்த சட்ட முன்வடிவு வந்து, பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, விவாதிப்பதற்கு உரிமை உண்டா என்று கேட்கிறார்கள். அதைப் பற்றி நான் தீர்ப்பளிப்பது சரியல்ல. பொதுவாக அதைப்பற்றி இந்த அவையே முடிவு எடுக்க வேண்டும். அதற்குத் தனியாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பவேண்டுமென்று ஒன்றும் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களால் முன்மொழியப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஒரு தீர்ப்புதான்.

THIRU M. A. LATHEEF : I would point out to the Hon. Leader of the House that this Bill is not within the legislative competence of this House and therefore I request the Hon. Minister for Education to withdraw the Bill and recommit it to the Joint Select Committee. It cannot be introduced and it should be withdrawn.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை உங்களுடைய பேச்சிலே குறிப்பிடலாம். 'லீடர் ஆப் தி ஹவுஸை' நீங்கள் கேட்க முடியாது.

(6) அரசினர் சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள்
(முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை
சட்ட முன்வடிவு எண் 24/72) கூட்டாய்வுக்குழு
திருத்தியமைத்தவாறு (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, உங்கள் திருத்தத்தை முன்மொழிகிறீர்களா?

திரு. என். கே. பழனிசாமி : நான் முன்மொழியவில்லை.